# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தோழர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
மு.சுப்பிரமணியன்

பொதுச் செயலாளர்
மு.அன்பரசு

மாநில துணைத் தலைவர்கள்
ந.குமாரவேல்
ஆ.செல்வம்
எஸ்.தமிழ்ச்செல்வி
சு.பார்த்திபன்
மொ.ஞானத்தம்பி
மு.சுப்பிரமணியன்

மாநிலப் பொருளாளர்
எம்.தாங்கராஜ்

மாநிலச் செயலாளர்கள்
இரா.பன்னீர்செல்வம்
சி.ஆர்.இராஜகுமார்
என்.ஜனார்த்தனன்
தீ.கலைசெல்வி
எம்.சௌந்தரராஜன்
ஏ.பெரியசாமி


ஊடகச்செய்தி எண்.14/2018 நாள்.31.10.2018

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும்**

## ஊடகச் செய்தி

**போராடும் சத்துணவு ஊழியர் வாழ்வாதார கோரிக்கைகள்**
**தமிழக அரசு நிறைவேற்ற வலியுறுத்தி**
**02-11-2018 அன்று வட்டத் தலைநகரங்களில்**
**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டம் !**

தமிழ்நாடு அரசின் சத்துணவு திட்டத்தின் கீழ் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் தரப்படுத்தப்படாத ஊதிய முறையில் ஊதியம் பெற்று உழன்று வருகின்றனர். இவர்களின் உழைப்பு முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பணி நன்மைகளும் இல்லாமல் பணிசெய்து வருகின்றனர். தங்களுக்கு, தரப்படுத்தப்பட்ட, முறையான ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று இவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக அரசுக்கு கோரிக்கை வைத்தும் போராட்டங்களில் ஈடுபட்டும் வருகின்றனர். இவர்களின் ஊதியத்தை வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் நிர்ணயம் செய்து வழங்கிட அரசு ஊழியர் சங்கத்தின் சார்பிலும் பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. மேலும் இவர்களுடைய போராட்டங்களின் மூலமாக

**சத்துணவு, அங்கன்வாடி மைய உதவியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்திடவும், சத்துணவு சமையலருக்கு தற்போதைய ஊதிய ஏற்ற நிலைக்கு ஏற்ப ஊதியத்தை நிர்ணயம் செய்ய வேண்டுமெனவும், சத்துணவு அமைப்பாளர்களின் பணிப்பொறுப்புகளை, அதாவது அவர்கள் மேற்கொள்ளும் பதிவேடுகளை பராமரித்தல், பணம் கையாளுதல் போன்ற பணிகளை கருத்தில் கொண்டு அவர்களுக்கு இளநிலை உதவியாளர் ஊதிய விகிதத்திற்கு இணையான ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும்** எனவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

சத்துணவு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை உணர்ந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் சென்ற சட்டமன்றத் தேர்தலின்போது தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்புகாலமுறை ஊதியம் போன்ற கூலிமுறைகள் ஒழிக்கப்பட்டு முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்ற முக்கியமானதொரு வாக்குறுதியை அளித்தார்.

ஆனால் அதன்பிறகு தேர்தலில் வென்று தமிழகத்தில் ஆட்சி நடத்தும் அ.தி.மு.க. அரசு சொன்னபடி சிறப்புகாலமுறை ஊதியம் ஒழிக்கப்படாததாலும், தரப்படுத்தப்பட்ட ஊதிய ஏற்றமுறை மற்றும் வரையறுக்கப்பட்ட ஊதியம் போன்றவை வழங்கப்படாததாலும், மீண்டும் பல்வேறு விதமான போராட்டங்களை நடத்திட வேண்டிய நிலை எழுந்தது. அந்த இடைவிடாத போராட்டங்களின் விளைவாக, போராட்டங்களில் உள்ள நியாயத்தை உணர்ந்த மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 19-02-2016 ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என தெரிவித்தார். ஆனால் இன்றுவரை சத்துணவு ஊழியர்களின் ஊதிய நிர்ணயம் குறித்து எந்தவித அறிவிப்புகளும் இல்லை. தற்போதைய ஊதிய மாற்ற அறிவிப்பில் இது குறித்து அறிவிப்புகள் வெளியாகும் என்று நம்பிக்கையுடன் இருந்த சத்துணவு ஊழியர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அதனால் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி தொடர் காத்திருப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்.

மூன்று தலைமுறைகளாக தங்களுக்கு முறையான ஊதிய நிர்ணயம் செய்யப்பட வேண்டும், பிற அரசுத்துறை ஊழியர்களைப் போல் தங்களையும் கருத வேண்டும் என்ற அவர்களின் நியாயமான கோரிக்கைகளை எந்த அரசுகளும் முறையாகவோ கனிவாகவோ பரிசீலித்து அவர்களின் ஊதிய உயர்வுகளை நிர்ணயம் செய்யவில்லை. கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை ஒப்புக்கொண்டு அவற்றை பரிசீலிப்பதாக தெரிவித்த மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் வாக்குறுதியும் நிறைவேற்றப்படாமல் உள்ளது. இதனால் சத்துணவு ஊழியர்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி கடந்த 25.10.2018 முதல் தொடர்ந்து பின்வரும் இயக்கங்களை நடத்தி வருகின்றனர்.

25.10.2018 முதல் 27.10.2018 வரை காத்திருப்பு போராட்டம்

29.10.2018 முதல் 30.10.2018 வரை மறியல் போராட்டமும், 31.10.2018 கருப்பு உடை அணிந்து மறியல் போராட்டமும் நடைபெற்றது

இச்சூழலில் 30.10.2018 அன்று தமிழக அமைச்சர் மற்றும் உயர் அலுவலர்கள் பேச்சவார்த்தையில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படாத சூழலில் மேலும் போராட்டம் தொடர்கிறது.

இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலையிட்டு போராடும் சத்துணவு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றும் பொருட்டு சங்கத்தின் மாநில நிர்வாகிகளை அழைத்துப்பேசி சுமூகத் தீர்வு காண வேண்டும் என் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

**மேலும் போராடும் சத்துணவு ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 02-11-2018 அன்று தமிழகம் முழுவதும் வட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்.**

**(மு. அன்பரசு)**
பொது செயலாளர்.